**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண் - 27/2023**

**வாதி தரப்பு சாட்சி-1 ராஜேந்திரன் - திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 18.08.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) வா.சா.ஆ.6 புலவரைபடத்தில் பாதை எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பிரதிவாதியின் நிலம் நீதிமன்ற ஆணையர் பார்வையிடும் போது மேட்டுப்பகுதியாக இருந்தது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில் பிரதிவாதியின் நிலம் வழியாக பாதை எதுவும் இல்லை என குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல, பாதை இருக்கிறது. பிரதிவாதியின் நிலம் சுமார் 15 வருட காலமாக மேட்டுப்பகுதியாகத்தான் இருக்கிறது என்றால் இல்லை, 5 வருடமாகத்தான் அவ்வாறு இருக்கிறது. மேற்படி மேட்டுப்பகுதியில்தான் முட்புதர்கள், வேப்பமரம் ஆகியவை உள்ளது என்றால், வேப்பமரம் மட்டும் உள்ளது. எனது தகப்பனார் 1991 ல் இடத்தை கிரையம் வாங்கிய போது, அதுபற்றி எனக்கு நன்கு தெரியும் என்றால் அதுபற்றி எனக்கு சரியாக தெரியாது. நான் எப்போது மேற்படி பத்திரத்தை பார்த்தேன் என்றால் 2017 ம் வருடம் பார்த்தேன். 2017 ம் வருடம் நான் எனது தகப்பனாரின் கிரைய ஆவணத்தை பார்த்த பின்தான் அதில் பாதை எழுதப்பட்ட விபரம் தெரியுமா என்றால் ஆமாம். பிரதிவாதி சுமார் 10, 15 வருடங்களாக கிணறு இருந்தும் சாகுபடி செய்யவில்லை என்றால் சரிதான்.

2) சாகுபடி செய்யப்படாத நாட்களில் யார் வேண்டுமானாலும் அந்த வழியாக போய் வருகிறார்கள் என்றால் சரிதான். 2017 ம் வருடம் நான் பாதை இருப்பதை பார்த்த பின்னிட்டு அதுகுறித்து ஏதாவது நடவடிக்கை எடுத்தேனா என்றால் எடுத்தேன். அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இவ்வழக்கு தாக்கல் செய்த போது பிரதிவாதியின் நிலத்தில் பாதை எதுவும் இல்லை என்றால் சரியல்ல, இருந்தது. நான் எனது சித்தப்பா பெரியசாமி நிலத்தின் வழியாகத்தான் சென்று வருகிறேன் என்றும், வழக்கிற்காக பிரதிவாதிகள் நிலத்தின் வழியே செல்வதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நில அளவையர் அளவீடு செய்தபோது தாவா பி பட்டியல் சொத்து பிரதிவாதியின் ஆவணங்களில் கண்ட அளவுகளுக்கு கட்டுப்பட்டுதான் இருந்தது என்றால் சரிதான். எங்களது நிலம் அளவு செய்யும் போது அளவுகள் சரியாக இருந்தது என்றால் சரியல்ல, குறைவாகத்தான் இருந்தது. எவ்வளவு நிலம் குறைவாக இருந்தது என்றால் 7 ½ செண்ட் நிலம் குறைவாக இருந்தது.

3) பிரதிவாதி எப்போது எங்கள் நிலத்தை விலைக்கு கேட்டார்கள் என்றால் சுமார் 2, 3 வருடங்களுக்கு முன்பு கேட்டார்கள். பிரதிவாதி எப்போது என்னிடம் தகராறு செய்தார் என்றால் 2023 ம் வருடம் தகராறு செய்தார். எந்த காலத்திலும் பிரதிவாதி நிலத்தின் வழியாக எனக்கு பாதை இல்லை என்றும், நான் மேற்குபுறம் உள்ள எனது சித்தப்பா பெரியசாமி நிலத்தின் வழியாகத்தான் சென்று வருகிறேன் என்றும், வழக்கிற்கான தாவா பி பட்டியல் சொத்தில் பாதை இருப்பதாக பொய்யாக வழக்காடி வருகிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் இருதரப்பினர் நிலங்களையும் அளவீடு செய்து, அளவீடுபடி சரியாக இருக்கிறது என அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அதுபற்றி தெரியாது. நான் சொல்வது போல 7 ½ செண்ட் நிலம் எனக்கு குறைவாக இல்லை என்றும், நில அளவையர் எனது நிலத்தின் அளவீடு சரியாக இருப்பதாக குறியுள்ளார் என்றால் சரியல்ல. பாதை எதுவும் இல்லாமல் வேண்டுமென்றே பிரதிவாதியின் நிலத்தில் பாதை இருப்பதாக பொய்யாக ஆவணத்தை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே தாவா தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி

**Principal District Munsif,**

**Kulithalai.**